தமிழ்நாட்டிற்கான கோதுமை ஒதுக்கீடு.

*வினா எண் 551— திரு. பெ. சு. திருவேங்கடம், திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு அதிக கோதுமை ஒதுக்கக்கோரி மத்திய அரசை கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம்எனில் எத்தனை ஆயிரம் டன் கேட்டுள்ளது ?

(இ) மத்திய அரசு ஒதுக்கிய அளவென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ் நாடு அரசு, பொது விநியோகத்திற்கு குடும்ப, கார்டுகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கென மாதம் ஒன்றுக்கு 10,000 டன்கள் கோதுமையும், கோதுமைப் பொருட்களாக்க கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கென 50,000 டன்கள் கோதுமையும் ஒதுக்கும்படி மைய அரசைக் கோரியுள்ளது.

(இ) மத்திய அரசு பொது விநியோகத்திற்கென கடந்த ஏப்ரல் முதல் மாதம் ஒன்றுக்கு 4,000 டன்கள் கோதுமையும் கோதுமை உருளை மாவு ஆலைகளுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கென 30,000 டன்கள் கோதுமையும் வழங்கி வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தமாக 10,000 டன் கோதுமை வேண்டுமென்று கேட்கப்பட்டு, 4,000 டன் தான் வந்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இது போதவில்லை என்று மத்திய அரசிடம் கேட்கப்பட்டதா ? மத்திய அரசு தரவில்லை என்றால், மாநில அரசே வட மாநிலங்களில் தனியாக கோதுமை வாங்கி, விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நம்முடைய தேவை, பொது விநியோகத்திற்கு குறைந்த அளவுக்கு 10 ஆயிரம் டன் தேவைப்படுகிறது. கோதுமை உருளை ஆலைகளுக்கு அரைப்பதற்கு 1980 ஆம் ஆண்டுக்கு முன்னாலே 65 ஆயிரம் டன் ஒதுக்கப்பட்டது, 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து 65 ஆயிரம் டன்னை குறைத்து 30 ஆயிரம் டன்னாக்கிவிட்டார்கள். அதற்குக்

1982 மார்ச் 19]

காரணம் அவர்கள் அகில இந்திய அளவிலே எல்லா மாநிலங்களுக்கும் குறைத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். கோதுமையினுடைய இருப்பு குறைந்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். கோதுமை அரவை ஆலைகளின் அரைவைத் திறன் அளவுக்கு 100-க்கு 100 நம்மால் கொடுக்கமுடியவில்லை. 72, 73 சதவீதம்தான் கொடுக்க முடிகிறது. இப்போது 30 ஆயிரம் டன்கள் தாம் கொடுக்கிறார்கள். அதிகமாகத் தரவேண்டுமென்று நாம் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். போன ஏப்ரலில் இருந்து 3 ஆயிரம் டன்கள் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். அதிலே ஒரு ஆயிரம் உயர்த்தி 4 ஆயிரம் தருகிறார்கள். மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலையின் அடிப்படையில் வழங்குவதன் காரணமாக நமக்கு கட்டுப்படியாகக்கூடிய விலையிலே வாங்கமுடிகிறது. வெளிச்சந்தையிலே விலை அதிகமாக இருப்பதாலே விநியோகத்திலே பல தன்மைகள் இருக்கும் என்பதால் வெளிச் சந்தையிலே வாங்கமுடியாத நிலை இருக்கிறது. மத்திய அரசு இந்த கொள்முதல் விலையிலேயே நமக்குத் தருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, பத்தாயிரம் டன் கோதுமை குடும்பக் கார்டுகளுக்கு விநியோகிப்பதற்காக கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எந்தஎந்தப் பகுதிகளில் விநியோகிக்கப்படுகிறது. திருவண்ணாமலை போன்ற நகரங்களில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகக் கொடுக்கப்படவில்லையே, அதற்கும் கொடுக்கவேண்டுமென்றால் எவ்வளவு கோதுமை தேவைப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த பத்தாயிரம் டன்கள் வந்தாலும் நாம் தாராளமாகக் கொடுப்பதற்கான நிலைமை இருக்காது. எல்லா இடங்களுக்கும் ஓரளவிற்குப் பரவலாக தரலாம். 4 ஆயிரம் டன் தருவதின் காரணமாக பெருநகரங்கள் கோயமுத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகியவற்றில் கோதுமையை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற அடிப்படையில் விநியோகிக்கிறார்கள். எந்த எந்த ஊர்கள் என்ற விவரக் குறிப்பு என்னிடத்திலே இல்லை. இருக்கின்ற நிலைமைகளை வைத்து, தேவையை உத்தேசித்து தருகிறோம். திருவண்ணாமலையில் எந்த அளவுக்கு இருக்கிறது என்ற விவரக் குறிப்பு இல்லை.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, மத்திய அரசு மாநில அரசுக்கு கோதுமையை என்ன விலைக்குத் தருகிறார்கள்? என்ன விலைக்கு மக்களுக்குக் கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரம் இல்லை.